# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## S.T.C. No.65/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஜெயக்குமார் | த.பெ | பொன்னையா |
| ஊர்: | : | மதுரை | | |
| வயது: | : | 59/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | உணவு பாதுகாப்பு அலுவலர், உணவு பாதுகாப்பு துறை | மாவட்டம் | மதுரை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.02.2026**

1 ம் **எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2 ம் எதிரி ஆஜர்.**

----------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

1. நான் தற்சமயம் மதுரையில் வசித்து உணவு பாதுகாப்பு துறையில் பாதுகாப்பு அலுவலராக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு காரைக்குடி நகராட்சியில் உணவு பாதுகாப்பு அலுவலராக 2018-2019 ம் ஆண்டுகளில் பணியில் இருந்தபோது 20.04.2012 ல் அரசிதழில் உணவு பாதுகாப்பு அலுவலராக பணியாற்ற அறிக்கை பெற்றிருந்தேன். கடந்த 07.03.2019 ம் ஆண்டு காரைக்குடி வடக்கு காவல் நிலைய சார்பு ஆய்வாளரின் எழுத்து பூர்வ வேண்டுகோளுக்கு இணங்க நான் காரைக்குடியில் உள்ள சுப்ரமணியன்புரம் ரவி ஸ்டோர்ஸ் சேமிப்பு கிடங்கில் வைக்கப்பட்டிருந்த கணேஷ் 701 புகையிலை -135 பாக்ஸ்-8100 கிலோ எடையுள்ள புகையிலை பொருட்கள் இருந்தது. அங்கு நான் அவர்களுக்கு படிவம் III கைப்பற்றுதல் ஆணை கொடுத்து அங்கு வைக்கப்பட்டிருந்த பொருள் கலப்படம் இருக்கும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் அங்கிருந்தவர்களை விசாரணை செய்தபோது தன்னுடைய பெயர் R. ரவிசந்திரன், த.பெ.ராஜாமாணிக்கம், ரவி ஸ்டோர்ஸ் சேமிப்பு கிடங்கு 3/1742 சுப்ரமணியபுரம் 10 வது தெரு தெற்கு விஸ்தரிப்பு காரைக்குடி சிவகங்கை மாவட்டம் என்ற குடோனின் உரிமையாளர் என்று தெரியவந்தது. அங்கு கைப்பற்றி வைக்கப்பட்டிருந்த உணவு பொருள் சந்தேகத்தின் அடிப்படையில் கலப்படம் இருக்கும் என்று சந்தேகம் செய்து ரவி சந்திரன் அவர்களுக்கு படிவம் V A அவர்கள்கு தகவல் வழங்கப்பட்டது.

2. பின்னர் மாதிரி பொருள் எடுக்கப்பட்டு உணவு பகுப்பாய்விற்காக கோயம்புத்தூருக்கு அனுப்பப்பட உள்ளதாக தெரிவித்தேன். அங்கு வைக்கப்பட்டிருந்த உணவு பொருளில் 350 கிராம் எடையுள்ள பாக்கெட் இரண்டு விதம் மொத்தம் 8 பாக்கெட்கள் தலா இரண்டு பாக்கெட்டுகள் விதம்

4 மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அதற்கு முறையே I,II,III,IV என்று அடையாளப் படுத்தப்பட்டது. இந்த மாதிரி அங்குள்ள பொது சாட்சியான கருணாகரன் மற்றும் தர்மேந்திரன் அவர்கள் முன்னிலையில் சாட்சிகள் கையொப்பபம் பெற்று இதிலுள்ள நான்காவது பகுதியை FSSAI மற்றும் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட NABL பகுப்பாய்வகத்திற்கு உணவு பாதுகாப்பு தரங்கள் விதிகள் 2.41 ன் மூலமாக அனுப்பி ஆய்வு செய்து கொள்ளலாம் என்று கூறியதற்கு குற்றம் சாட்டப்பட்டவர் எனக்கு விருப்பம் இல்லை என்று எழுத்து மூலமாக தெரிவித்தார். பின்பு அதே நாளில் உணவு மாதிரியுடன் எடுத்து அனுப்புவதற்கு தேவையான படிவம் VI தயாரிக்கப்பட்டது. உணவு பகுப்பாய்வாளர் அலுவலர் அவர்களுக்கு உணவு மாதிரி, படிவம் VI Professional கோரியர் மூலமாக அனுப்பிவைக்கப்பட்டது. மேற்படி அனுப்பி வைக்கப்பட்டதற்கான ஒப்புகை ரசீது கிடைக்கப்பட்டது.

3. மாதிரி எடுத்த அதே நாளில் 07.03.2019 நியமன அலுவலர் சிவகங்கை மாவட்டம் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதே நாளில் மீதமுள்ள மாதிரியான II,III,IV மாதிரிகளை பெற்றுக்கொண்ட மாவட்ட நியமன அலுவலர் அவர்களிடம் இருந்து ஒப்புகை கடிதம் பெறப்பட்டது. 07.03.2019 அன்று தயாரிப்பாளருக்கு படிவம் V A அனுப்பி வைக்கப்பட்டது. பின்பு 07.03.2019 அன்று படிவம் IV பிணை உறுதி படிவம் திரு. வெங்கடேசன், திரு. சிவகணேசன் அவர்கள் மூலமாக பெற்றுகொண்டு அரசு சாட்சியாக அன்றைய கிராம நிர்வாக அலுவலர் சசிகுமார் அவர்களிடம் கையொப்பம் பெற்றுகொண்டு திரு. ரவிசந்திரன் அவர்களிடத்திலேயே பொருள் பாதுகாப்பாக வைக்கப்பட்டது. உணவு மாதிரியை 11.03.2019 அன்று பெற்று கொண்ட உணவு பகுப்பாய்வாளர் அலுவலர் கோயம்புத்தூர் அவர்கள் 21.03.2019 ந்தேதியிட்ட உணவு பகுப்பாய்வு அறிக்கையை மாவட்ட நியமன அலுவலர் சிவகங்கை அவர்களுக்கு 25.03.2019 அன்று கிடைக்கப்பெற்றது. பகுப்பாய்வு அறிக்கையில் மேற்கண்ட உணவு பொருள் விற்பனைக்கு தடைசெய்யப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற உணவு என்று சான்று அளிக்கப்பட்டது. மேற்கண்ட ஆய்வறிக்கை மற்றும் நியமன அலுவலர் அவர்களின் அறிவிப்பு கடிதம் 26.03.2019 அன்று தபால் மூலம் குற்றச்சாட்ட நபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அறிக்கையின் நகலை பெற்றுக்கொண்ட தயாரிப்பாளர் 21.03.2019 அன்று அனுப்பிய பதில் கடிதத்தில் மாண்புமிகு மதுரை உயர் நீதிமன்ற வழக்கு எண். WP.No. 12472/2017 என்ற நீதிப்பேராணையின் உத்தரவின் அடிப்படையில் நான் இதற்கு முழு பொறுப்பு அல்ல என்று தயாரிப்பாளர் எழுத்து பூர்வமாக மாவட்ட நியமன அலுவலருக்கு அனுப்பிவைத்தார். 25.03.2019 அன்று குற்றம் சாட்டப்பட்ட நபர் 2 ரவிச்சந்திரன் அவர்களுக்கு மேற்படி முதலாம் நபர் தெரிவித்த தகவலை தபால் மூலமாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

4. தகவலை பெற்றுக்கொண்ட இரண்டாம் நபர் 29.03.2019 அன்று தான் அந்த பொருளை யாரிடம் இருந்து வாங்கினேன் என்று எந்த நபரிடம் இருந்து வாங்கினேன் என்று தெரியாது என்றும் சேலத்தில் இருந்து பொருள் வரும் என்றும் அந்த பொருளை தெரியாத நபர்களிடம் இருந்து வரும் என்றும் சொன்னார். ஆகவே தயாரிப்பாளர் யார் என்றும் எனக்கு தெரியாது. ஆகவே நானே இதற்கான முழு பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன் என்று எழுத்து பூர்வமாக தெரிவித்தார்.

மேலும் 14.02.2019 அன்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதிப்பேராணை எண். 778/2019 என்ற தீர்ப்புரையில் உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்களின் தடையாணை செல்லும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. 05.04.2019 அன்று மாவட்ட நியமன அலுவலர் சிவகங்கை அவர்கள் குற்றம் சாட்டப்பட்ட இருவர் மீதும் இந்நீதிமன்றத்தில் வழக்கு தொ62டர வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை உணவு பாதுகாப்பு ஆணையர் சென்னை அவர்களுக்கு அனுமதி வேண்டி பரிந்துரை கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. 15.06.2019 அன்று குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் மீது உணவு பாதுகாப்பு ஆணையர் சென்னை அவர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர அனுமதி வழங்கியுள்ளார். மேற்சொன்ன காரணங்களின் அடிப்படையில் கனம் நீதிமன்றத்தில் புகாரை ஏற்று விசாரணை செய்து தனிநபர் குற்ற முறையீடு வழியாக தாக்கல் செய்தேன்.

5. மேலும் உணவு பாதுகாப்பு தரங்கள் சட்டம் 2006 ன் படி பிரிவு 58,59(1) மற்றும் 63 ன் கீழ் வழக்கு பதிவு செய்து ஒப்படைத்தேன். **தமிழ்நாடு அரசிதழ் ஆணை.103 - அசாஆ 1. சார்பு ஆய்வாளர் காரைக்குடி வடக்கு காவல் நிலைய புகார் அசாஆ 2. படிவம் III கைப்பற்றுதல் ஆவணம் அசாஆ 3. V A புகார்தாரர்கள் எதிரிகளுக்கு மாதிரி எடுக்க உள்ளதாக தகவல் தெரிவிக்கும் அறிக்கை அசாஆ 4. மகஜர் மனு அசாஆ 5. படிவம் VI உணவு பகுப்பாய்வாளர் அவர்களுக்கு மாதிரியுடன் அனுப்பக்கூடிய குறிப்பாணை அசாஆ 6. மேற்படி உணவு பகுப்பாய்வாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்ட மாதிரி முத்திரை பதித்த படிவம் அசாஆ 7. கூரியர் ரசீதுகள் அசாஆ 8 மற்றும் 9. மாவட்ட நியமன அலுவலர் அவர்களுக்கு தகவல் தெரிவித்த கடிதம் அசாஆ 10. மாவட்ட நியமன அலுவலர் பெற்றுகொண்ட ஒப்புக்கை கடிதம் அசாஆ 11. படிவம் V A அசாஆ 12. கூரியர் ரசீது அசாஆ 13. பிணை உறுதி பத்திரம் அசாஆ 14. ஆய்வக அறிக்கை அசாஆ 15. 30 நாட்கள் அறிக்கை அசாஆ 16. தயாரிப்பாளரின் பதில் அறிக்கை அசாஆ 17. ரவிசந்திரன் அவர்களுக்கு அனுப்பிய அறிக்கை அசாஆ 18. அதற்கான பதில் அறிக்கை அசாஆ 19. மாண்புமிகு மதுரை உயர் நீதிமன்ற WP.No. 778/2019 அசாஆ 20. உற்பத்தியாளரிடம் நான் கேட்ட விளக்க கடிதம் அசாஆ 21. உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்களின் தடையாணை அசாஆ 22.**

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. புகார் மனுவானது உணவு பாதுகாப்பு அலுவலர் என்று தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். புகார் மனுவில் உள்ள கையொப்பம் யாருடையது என்றால் என்னுடையது தான். புகார்மனுவிற்கு கீழ் என்னுடைய பெயர் உள்ள சீல் எதுவும் இல்லை என்றால் சரிதான். 2019 ல் காரைக்குடி நகராட்சி உணவு பாதுகாப்பு அலுவலராக பணி செய்து வந்தேன். நான் தாக்கல் செய்துள்ள அசாஆ 1 என்ன என்றால் அரசிதழில் வெளியிடப்பட்ட அரசாணை. மேற்படி அரசாணையில் பெயர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது தகப்பனார் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உணவு பாதுகாப்பு அலுவலருக்கு அரசாங்கத்தால் அடையாள அட்டை தரப்படும் என்றால் சரிதான். அவ்வாறு என்னுடைய அடையாள அட்டையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2வது எதிரியிடம் இருந்து

கைப்பற்றப்பட்ட Coolip என்ற புகையிலை உணவு பொருள் இல்லை என்றால் அது உணவு பொருள் தான். 2 எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட Coolip என்ற புகையிலை யாரிடம் இருந்து வாங்கியதாக சொன்னார் என்றால் அது குறித்து அவர் சொல்லவில்லை சேலத்தில் இருந்து வரும் அடையாளம் தெரியாத நபரிடம் இருந்து பெற்றதாக சொன்னார். 1 வது எதிரியிடம் இருந்து மேற்படி புகையிலை பொருட்களை பெற்றதாக 2 வது எதிரி சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட புகையிலை பொருட்களை பத்திரமாக வைத்துள்ளேனா என்றால் 2 வது எதிரி வசம் பிணை உறுதி பத்திரம் பெற்று அவர் வசமே உள்ளது.

2. மேற்படி புகையிலை பொருள் தமிழ்நாட்டில் எத்தனை வருடங்களாக தடைசெய்யப்பட்டு உள்ளது என்றால் 2019 ம் ஆண்டில் இருந்து நடைமுறையில் உள்ளது. 1வது எதிரி கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் புகையிலை பொருட்கள் உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வராது மேற்படி கைப்பற்றப்பட்ட பொருட்கள் உணவு பொருளே இல்லை என்றால் சரியல்ல உணவு பொருள் தான் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி புகையிலை பொருட்களை தமிழ்நாட்டில் தடைவிதித்த பின்னர் 1வது எதிரி புகையிலை பொருட்களை விற்பனை செய்யவில்லை என்றால் சரிதான். 1வது எதிரி மேற்படி புகையிலை பொருட்களை தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யவில்லை என்றால் சரிதான். 1வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கை தாக்கல் செய்வதற்கு நான் முறையான அடையாள அட்டையை தாக்கல் செய்யவில்லை என்பதால் இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை எதிரியை அச்சுறுத்தி இவ்வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.18 16:00:29 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.